# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 185/மா/2017

ஆணை எண். 39/2018

நாள் : 01/03/2018

திரு V. நித்தியா,
சென்னை – 600 024. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலவர்,
மண்டலம் – 10,
பெருநகர சென்னை மாநகராட்சி, – எதிர் மனுதாரர்
சென்னை – 600 024

சென்னை, கோடம்பாக்கம், காமராஜர் காலனி, எண்.34, சி–பிளாக் முகவரியில் வசிக்கும் திரு V. நித்தியா அவர்களின் 22.09.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 23.09.2017 அன்று பெறப்பட்டு, 185/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் மற்றும் மண்டல அலுவலர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, கோடம்பாக்கம், காமராஜர் காலனி, எண்.34, சி–பிளாக் முகவரியில் வசிக்கும் திரு V. நித்தியா என்பவர், கோடம்பாக்கம், பவர் ஹவுஸ் அருகில் உள்ள சமுதாய நலக்கூடத்தை பயன்படுத்துவதில் நடைபெறும் கீழ்க்காணும் முறைகேடுகள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்:-

(1) சென்னை மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையை விட கூடுதலாக அரை நாள் மற்றும் முழு நாளுக்கான வாடகையை வசூலிப்பது ;

(2) சமுதாயக் கூடத்தில் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தனி அலுவலகம் நடத்துவதுடன், பாத்திரங்கள் நாற்காலி, மேசை முதலியனவற்றை சொந்தமாக வாடகைக்கு விடுவது ;

(3) பயனாளிகளுக்கு இரசீது தர மறுப்பது ;

(4) அறிவிப்பு பலகையில் தொலைபேசி எண்களை பதிவு செய்யப்படாததால் பொதுமக்கள் முறைகேடுகள் குறித்து புகார் தெரிவிக்க இயலாத நிலை ;

(5) மேற்குறிப்பிட்ட முறைகேடுகளுக்கு பத்தாவது மண்டல அலுவலர் உடந்தையாக இருப்பது ;

2. மேற்குறிப்பிட்ட முறைகேடுகள் சம்பந்தமாக புகார்களுக்கு மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. சென்னை மாநகராட்சியில் இயங்கும் சமுதாய நலக்கூடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் பதிவுகள் அனைத்தும் வரைவோலை பெற்றுக் கொண்டு, கணினி மூலமாக மாநகராட்சி தலைமையகத்தில் அவர்கள் குறிப்பிடும் நாட்களுக்கு நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்படுகின்றன. மேலும், பதிவு செய்யப்பட்ட உத்தரவு நகல்கள் சமுதாய நலக்கூடங்கள் உள்ளடக்கிய கோட்ட இளநிலை / உதவிப் பொறியாளர்களிடம் வழங்கப்பட்டு, அவர்கள் மூலமாக சமுதாய நலக்கூடங்கள் நிகழ்ச்சிகளுக்காக திறந்து விடப்படுகின்றன என்றும் நிகழ்ச்சிகள் முடிவு பெற்றபின் வருவாய் துறையில் பணிபுரியும் வரி வசூலர் மின்சார பயன்பாட்டினை அளவு செய்து குறித்துக் கொண்டும் முன் வைப்புத் தொகையில் மின் பகிர்மானத் தொகை போக மீதமுள்ள தொகையினை திரும்ப காசோலையாக வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்கின்றனர் என மண்டல அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். care taker இல்லாத காரணத்தினால் பயன்படுத்தப்படும் தளவாடப் பொருட்களுக்கான பொறுப்பினையும் வருவாய் வசூலர் மேற்கொள்கின்றார் எனவும் தெரிவித்துள்ளார்.

3. 26.02.2018 அன்று நடைபெற்ற விசாரணைக்கு மண்டல அலுவலர் வருகை தந்து வாக்குமூலம் அளித்தார். விசாரணையின்போது தனது அறிக்கையில் கூறப்பட்டதையே உறுதி செய்தார். மேலும், சமுதாய நலக்கூடத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு மனுதாரர் குறிப்பிட்டது போல், மேசை, நாற்காலி, பாத்திரங்கள் தனியார்கள் வாடகைக்கு விடுவதில்லை என்றும் மாநகராட்சியே மேற்குறிப்பிட்ட பாத்திரப் பண்டங்களை மாநகராட்சியே நேரடியாக வாடகைக்கு விடுகின்றன எனவும் தெரிவித்தார்.

4. முறையீட்டு மனுதாரர் 25.01.2018 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு அழைக்கப்பட்டார். மேற்குறிப்பிட்ட நாளில், விசாரணைக்கு வராத நிலையில் மீண்டும் ஒரு வாய்ப்பளித்து 26.02.2018 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருமாறும் ஆணையிடப்பட்டது. எனினும், மனுதாரர் விசாரணைக்கு இரண்டு தடவை வாய்ப்பளித்தும் வருகை தரவில்லை. சமூக ஆர்வலர் என்று தன்னை கூறிக்கொண்டு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்பவர் தான் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளுக்கு ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டும். அரசியல் கட்சியை சேர்ந்த நபர்கள் பாத்திர பண்டங்களை வாடகைக்கு விடுகிறார்கள் என்றும் தெரிவிக்கும் மனுதாரர், அத்தகைய நபர்களை பற்றிய விவரங்களை தெரிவிக்க தவறியுள்ளார். சமுதாய நலக் கூடத்தினை பயன்படுத்திய நபர்களுக்கு பணம் பெற்றபின் இரசீது தர மறுக்கின்றனர் என்ற குற்றச்சாட்டிற்கும் ஆதாரங்களை தாக்கல் செய்யவில்லை. போதுமான ஆதார ஆவணங்கள் இன்றி, இம்முறைமன்ற நடுவத்தில் முறைகேடுகள் குறித்து முறையீடு செய்வதும், அவற்றினை உறுதி படுத்த விசாரணைக்கு வர மறுப்பதும் சமூக ஆர்வலர் தன்னை க் கூறிக்கொள்ளும் மனுதாரரின் செயல் ஆரோக்கியமானதல்ல. எனவே, குற்றச்சாட்டு ஆதாரம் ஏதும் தாக்கல் செய்யாமலும் விசாரணைக்கு வராமலும் மனுதாரர் செயல்படும் நிலையில், மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு அவைகள் ஏற்றுக்கொள்ளப்

பட்டு முறையீட்டு மனு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது. சமுதாய நலக் கூடத்தில் நடைபெறும் முறைகேடுகளை பொதுமக்கள் தெரிவிப்பதற்கான தொலைபேசி புகார் எண்களை சமுதாய நலக்கூட அறிவிப்புப் பலகையில் இடம் பெறச் செய்வதை மண்டல அலுவலர் உறுதிப் படுத்த வேண்டுமெனவும் அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 01–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **உதவி ஆணையர்,**
   **மண்டலம் – 10,**
   **பெருநகர சென்னை மாநகராட்சி,**
   **எண்.117, என்.எஸ்.கே. சாலை,**
   **கோடம்பாக்கம்,**
   **சென்னை – 600 024**

2. **திரு V. நித்தியா,**
   **எண்.34, சி.பிளாக்,**
   **காமராஜர் சாலை,**
   **கோடம்பாக்கம்,**
   **சென்னை – 600 024.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர்(நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**